**தம்புள்ள மாநகர சபை**
**மாத்தளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 10 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தம்புள்ள மாநகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 611,562 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மற்றும் மீளாய்வாண்டின் நிர்மாணங்களின் பெறுமதியான ரூபா 738,928 தொகை மூலதனமாக்கப்படவில்லை. | நிலையான சொத்துக்கள் மற்றும் நிர்மாணங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 4 டெக்டர் டேலர்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படவில்லை. | டக்கர் டேலர்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட வேண்டும். | பதிவேட்டுச் சான்றுகள் காணப்படாமையினால் கணக்கீடு செய்ய முடியாதுள்ளது. |
| (iii) | மீளாய்வாண்டின் இறுதியில் ஆயர்வேத இருப்புக் களஞ்சிய மீதி ரூபா 353,190 தொகை நகர அபிவிருத்தி அதிகார | குறைவாக கணக்கீடு செய்யப்பட்ட மீதி சரி செய்யப்பட | கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகள் ஆண்டின் செலவினமாக பதியப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | சபை மற்றும் அதனுடன் பேணிச் செல்லப்படுகின்ற சேமிப்புக் கணக்கின் மீதி ரூபா 32,775 தொகை குறைவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | வேண்டும். | |
| (iv) | மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய 05 மீதிகளின் கூட்டுத் தொகையான ரூபா 82,965 தொகை மற்றும் திகம்பதஹ கவசிமா செயற்திட்டத்தின் மதகு மற்றும் அத்துபாறயாய சமுர்த்தி மாவத்தையின் ஒழுங்கை என்பவற்றை அபிவிருத்தி செய்யும் வேலையின் கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுப்பெறுமதியான ரூபா 318,227 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோர் மீதிகள் சரியாக கணக்குகளில் சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டு முதல் உரிய பிரகாரம் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | நிலையான சொத்துக்களின் கூட்டுத்தொகைக்கும் மூலதன ஈடுபடுத்தலுக்காக வருமான பங்களிப்பு கணக்கிற்கும் இடையே ரூபா 317,522,866 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாட்டிற்கான காரணம் இனங்காணப்பட்டு மீதி சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (vi) | கெப் வண்டியொன்றை பழுதுபார்ப்பதற்காக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் செலுத்தப்பட்ட ரூபா 897,838 தொகை மீளாய்வாண்டின் கடன்கொடுத்தோராக காண்பிக்கப்பட்டிருந்தது. | கடன்கொடுத்தோர் மீதிகள் சரியாக கணக்குகளில் சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 10,141,234 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய உபயோகப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 1,232,222 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | மீதிகளின் வேறுபாடுகள் இணக்கஞ்செய்யப்பட்டு கணக்குகள் சரிசெய்யப்பட வேண்டும். | பொது வைப்புக் கணக்கின் மீதி பதிவேட்டின் பிரகாரம் இனங்காண முடியாதிருந்தமையால் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகள் ஆண்டின் பயன்பாட்டுக்கு எடுக்கப்படும் என்ற அடிப்படையில் கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. முத்திரை கட்டுநிதிக் கணக்கின் மீதி ஆரம்பத்திலிருந்து சரி செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

**(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | பெறவேண்டிய கணக்குகள் | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட நிலுவை கடை வாடகை ரூபா 7,514,517 ஆக காணப்பட்டது. | பெறவேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடைகள் பதிய வாடகையாளர்களுக்கு 2019 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | நிலுவை ஆதன வரி ரூபா 4,024,423 தொகை அறவிடப்படவில்லை | பெறவேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொருத்தமான பிரகாரம் நிலுவை மீதியை அறவிடுவதற்கும் ஏனைய மீதிகளைப் பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| | செலுத்த வேண்டிய கணக்குகள் | | |
| | தம்புள்ள பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா | செலுத்த வேண்டிய மீதி தீர்க்கப்பட | காண்பிக்கப்பட்ட மீதி சரியானது என |

| | | |
|---|---|---|
| 2,486,916 தொகை மற்றும் வேலைக் கடன்கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய ரூபா 9,037,631 தொகை என்பன தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

**(ஈ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 195,527,245 பெறுமதியான 02 கணக்கு விடயங்களுக்குரிய ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காயைவின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாது இருந்தது. | நிதி கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பட்டோலைகளை சமர்ப்பிப்பதற்கு இயலுமானவரை எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2011 பெப்ரவரி 04 ஆம் திகதிய 13/2018(iv) ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | நகர ஆணையாளரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்காக அங்கீகாரம் இன்றி மேலதிகமாக எரிபொருள் லீட்டர் 1,183 பயன்படுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | இதற்காக பொதுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2015 மே 15 ஆம் திகதிய 1914/40 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் கட்டளை இலக்கம் | தம்புள்ள மாநகர சபையின் கூட்டத்திற்காக வருகைதராத இரண்டு உறுப்பினர்களுக்கு உறுப்பினர் படி மற்றும் | அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட | இவ்வாறான நிலமை ஏற்படுவதை தவிர்ப்பதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| 3(1)1 | தொலைபேசிப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | வேண்டும். | |

### 1.4.2 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தாத கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கவசிமா செயற்திட்டத்தின் ஆலோசனை நடவடிக்கைகளுக்காக ஒப்பந்தத் தொகையில் 3 சதவீத தொகை தம்புள்ள மாநகர சபையுடன் கைசாத்திடப்பட்ட புரிந்துனர்வு உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கப்பட வேண்டிய தொழில் ரீதியான ஆலோசனை சேவைகளை உறுதிப்படுத்தாது நகர சபையின் 06 உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 890,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | படிகளைச் செலுத்தும் போது வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பாக உறுதிப்படுத்துதல் அவசியமாகும். | இந்தப் பணம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மீளளிப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | மேற்கூறப்பட்ட ஆலோசனைக் கட்டணத்தின் கீழ் வேன் வண்டியின் வாடகை செலுத்தும் அடிப்படையில் பகல் இரவு சேவைகளுக்காக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டமைக்கான எழுத்து மூல சான்றுகள் இன்றி மீளாய்வாண்டின் போது ரூபா 944,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஓட்டத்தில் ஈடுபட்டமைக்கான ஓட்ட அட்டவணை மற்றும் எழுத்துமூல சான்றுகள் அவசியமாகும். | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மீளளிப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம். |
| (இ) | நான்கு வருட அபிவிருத்தி திட்டமொன்று தயாரிப்பதற்காக பெறப்பட்ட ஆலோசனை சபை நிறைவேற்றிய பணிகள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் | சபையின் நிறைவேற்று தரங்களில் தொழில் ரீதியான பதவிகளில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்கள் ஏனைய ஆலோசனையாளர் | மாநகர சபையின் நான்கு வருட அபிவிருத்தி திட்டமொன்று தயாரிப்பதற்காக அனுபவமுள்ள உத்தியோகத்தர்கள் இல்லாமையின் காரணமாக அவ்வாறு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | போது ரூபா 232,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | களுக்கு செலுத்துவதற்கு மாநகர சபை சட்டத்தில் ஏற்பாடுகள் காணப்படவில்லை. | எடுக்கப்படவில்லை. |
| (ஈ) | நகர பொறியியலாளர் சபையின் சேவைக்கு அறிக்கையிட்ட திகதி 2017 ஏப்ரல் 20 ஆக இருந்த போதிலும் பொறியியலாளர் சேவைக்கு முன்னராக நியமனம் வழங்கப்பட்ட திகதியான 2015 பெப்ரவரி 15 ஆம் திகதி முதல் சேவைக்கு அறிக்கையிடப்பட்ட காண்பித்து நிலுவை தொழில் மற்றும் தொலைபேசிப் படிகளாக ரூபா 450,516 தொகை தம்புள்ள மாநகர சபையினால் கண்டி மாநகர சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. | இந்த செலுத்துதல்கள் பொருத்தமான அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் மாத்திரம் செலுத்தப்பட வேண்டும். | இது தொடர்பாக உயர் மட்டத்தில் கடிதங்கள் பரிமாறப்பட்டிருந்ததுடன் இதற்காக பெறக்கூடிய படி ஏற்றுக் கொள்ளப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக வழங்கப்படுகின்ற இறுதிக் கட்டளையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) (i) | மத்திய மாகாணம் உள்ளூராட்சி ஆணையாளரின் 2018 ஜுன் 22 ஆம் திகதிய CPC/CLG/1/5/1 ஆம் இலக்க ஆலோசனை நூலின் பிரகாரம் பிரதம செயலாளரின் முன் அங்கீகாரம் பெறப்படாது 22 வீதித் தொழிலாளர்கள் 2018 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் சேர்க்கப்பட்டு திசெம்பர் வரை சபை நிதியத்திலிருந்து ரூபா 25,663,200 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | மேற்கூறப்பட்ட ஆலோசனை கைநூல் பின்பற்றப்பட வேண்டும். | தம்புள்ள மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டாய சேவை வழங்குவதற்குரிய பதிவியணியர் போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் அங்கீகாரத்தின் கீழ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தொழிலாளர்களை சேர்த்து சேவைகள் பெறப்பட்டிருந்ததுடன் செலுத்தப்பட்டுள்ள பணம் மாநகர சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தமையால் அதற்காக இதில் காண்பிக்கப்பட்டுள்ள அந்த பணத்தை மீளளிப்பு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | முடியாதிருந்தமையை அறியத்தருகின்றோம். |
| (ii) | மேற்கூறப்பட்ட பிரகாரம் பிரதம செயலாளரின் முன் அங்கீகாரம் இன்றி பல்வேறு அடிப்படையின் கீழ் நாளாந்தம் சம்பளம் செலுத்தப்படுகின்ற 65 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் நகர சபை நிதியத்திலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 13,512,639 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | மேற்கூறப்பட்ட ஆலோசனை கைநூல் பின்பற்றப்பட வேண்டும். | தம்புள்ள மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டாய சேவை வழங்குவதற்குரிய பதிவியணியர் போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் அங்கீகாரத்தின் கீழ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தொழிலாளர்களை சேர்த்து சேவைகள் பெறப்பட்டிருந்ததுடன் செலுத்தப்பட்டுள்ள பணம் மாநகர சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தமைய ால் அதற்காக இதில் காண்பிக்கப்பட்டுள்ள அந்த பணத்தை மீளளிப்பு செய்வதற்கு முடியாதிருந்தமையை அறியத்தருகின்றோம். |
| (ஊ) | நகர ஆணையாளரின் வருகை மற்றும் விடுமுறை தொடர்பாக சரியான மேற்பார்வையின்றி 2017 செப்டம்பர் 2018 திசெம்பர் வரை சம்பளமாக ரூபா 1,247,992 தொகையும் பதுக்கடமைப்படியாக ரூபா 145,753 தொகையும் கழிவுப் பொருள் முகாமைத்துவ மேற்பார்வை நடவடிக்கைகளுக்கான விடுமுறைதின சம்பளமாக ரூபா 211,604 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன. | சேவைக்கு வருகைதரல் வெளிச் செல்லல் மற்றும் விடுமுறைகளை உறுதிப்படுத்துதல் மற்றும் கடமைகளை மேற்பார்வை செய்தல் என்பவற்றின் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். | மாநகர சபையின் நகர ஆணையாளருக்கு நகர எல்லையில் 13 கிராம சேவகர் பிரிவுகளில் சுகாதாரம், வீதிகள் என்பவற்றை உள்ளடக்கிய நடவடிக்கைகளில் ஈடுபடும் போது கள நடவடிக்கைகளில் செல்வதற்கு ஏற்பட்டமையினால் வருகை, வெளிச் செல்கைகளை கையொப்பமிடுவதற்கு முடியாதிருந்ததை அறியத்தருகின்றோம். |
| (எ) | ஆயர்வேத வைத்திய உத்தியோகத்தர் 2018 திசெம்பர் 05 ஆம் திகதி | மேலதிகமாகச் செலுத்தப்பட்ட சம்பளம் | தற்போது இந்த உத்தியோகத்தர் சேவைக்கு வருகை |

| | | |
|---|---|---|
| சேவையை கைவிட்டு சென்றிருந்த போதும் அந்த மாதத்திற்காக சம்பளமாக ரூபா 52,510 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | அறவிடப்பட வேண்டும். | தந்தமையினால் சம்பளமாக செலுத்தும் போது இந்த தொகை அறவிடுதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,358,025 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 38,518,978 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 52,960,000 | 35,614,890 | 31,314,807 | 6,410,944 | 14,220,000 | 12,486,524 | 8,922,494 | 6,643,525 |
| (ii) | வாடகை | 16,090,000 | 16,622,969 | 19,256,852 | 12,145,463 | 14,480,000 | 12,539,193 | 11,906,354 | 14,905,596 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 10,700,000 | 6,991,409 | 8,393,013 | 55,885 | 8,650,000 | 5,796,117 | 6,750,440 | 1,457,490 |
| (iv) | ஏனைய வருமானம் | 57,595,600 | 29,854,800 | 44,777,046 | 1,345,000 | 35,154,500 | 36,454,485 | 32,029,260 | 22,847,453 |
| | மொத்தம் | 137,345,600 | 89,084,068 | 103,741,718 | 19,957,292 | 72,504,500 | 67,276,319 | 59,608,548 | 45,854,064 |

#### 2.2.2 ஆதனவரி

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ஆதனவரி சிட்டையிடல் ரூபா 4,012,663 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 2,001,640 | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு | சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் உள்ள |

| | | | |
|---|---|---|---|
| | தொகை மாத்திரம் ஆண்டின் போது அறவிடப்பட்டமையால் ஆண்டின் இறுதியில் நிலுவை ரூபா 6,030,947 ஆகக் காணப்பட்டது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | வசதியீனத்தினால் தொடர்ச்சியாக அந்த மீதி கொண்டுவரப்பட்டதுடன் ஆரம்ப சந்தர்ப்பத்தின் போது இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் இந்த பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. |
| (ஆ) | ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவைத் தொகை ரூபா 6,431,416 தொகையில் ஆண்டில் ரூபா 2,379,623 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை மீதி தொடர்பாக அறிவிக்கப்பட்ட போதும் அந்த நடவடிக்கைகள் சரியாக மேற்கொள்ளப்பாடதிருந்தமையை அறியத்தருகின்றோம். |

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் பேரூந்து நிலையம் மற்றும் மொத்த விற்பனை கடைகளில் நிலுவை வாடகையாக ரூபா 8,575,662 தொகை கிடைக்க வேண்டியிருந்ததுடன் பேரூந்து நிலையத்தில் 26 கடைகள் மற்றும் மொத்த விற்பனை கடைகள் 46 என்பன பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் மூடி வைக்கப்பட்டிருந்தன. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த கடைகளை சபை தீர்மானத்தின் மூலம் புதிய வாடகையாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற 364 வாடகை முச்சக்கர வண்டிகளில் 2018 ஆம் ஆண்டிற்காக பதிவுக் கட்டணமாக ரூபா 455,000 தொகை அறவிட வேண்டியிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த நிலுவை வாடகையைச் செலுத்துவதற்கு முச்சக்கர வண்டிச் சங்கத்துடன் இணங்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டிற்காக மெய்மெய் யாய்வு மேற்கொண்டு வணிக வியாபாங்களை இனங்காணல் இடம்பெறாதிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கிடைக்க வேண்டிய வியாபார வரி ரூபா 55,885 ஆகும | வியாபார இடங்களை மெய்மெய்யாய் வு செய்து பெற வேண்டிய வியாபார வரிகளை சரியாக இனங்கண்டு அறவிட வேண்டும். | இது தொடர்பாக தெளிவான அனுபவமுள்ள உத்தியோகத்தர்கள் காணப்படாமையினால் வரியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. |

**2.2.5 ஏனைய வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபைக்குச் சொந்தமான 12 மீன் கடைகளின் நிலுவைக் கேள்விக் கட்டணமாக ரூபா 588,860 தொகை அறவிடவேண்டியிருந்தது. | நிலுவைக் கேள்விக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபையினால் 2018 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளுடன் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும் அதில் எதிர்பார்த்த நிதிச் செயலாற்றல் காண்பிக்கப்படவில்லை. | உறுப்பினர்களின் முன்மொழிவு மற்றும் சபையின் நோக்கங்களின் பிரகாரம் எதிர்பார்த்த செயல் நடவடிக்கைத் | மாநகர சபையின் நடவடிக்கைகள் உறுப்பினர்களின் முன்மொழிவை அடிப்படையாகக் கொண்டும் செயல் நடவடிக்கைத் |

| | | |
|---|---|---|
| | திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட நிதி செயலாற்றலும் காண்பிக்கப்பட வேண்டும். | திட்டத்தை மிகவும் விடவும் அவர்கள் உறுப்பினர்களின் முன்மொழிவுகளுக்கு முன்னுரை வழங்கப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்தது. |

(ஆ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் வருடாந்த அபிவிருத்தி திட்டத்தின் மூலம் அங்கீகரிக்கபட்ட ரூபா 18,723,581 பெறுமதியான 06 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்படவில்லை. | ஆங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாநகர சபையின் நடவடிக்கைகள் உறுப்பினர்களின் முன்மொழிவை அடிப்படையாகக் கொண்டும் செயல் நடவடிக்கைத் திட்டத்தை மிகவும் விடவும் அவர்கள் உறுப்பினர்களின் முன்மொழிவுகளுக்கு முன்னுரை வழங்கப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்தது. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) நகர சபையினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் அமுல்படுத்தப்பட்டதாக காண்பிக்கப்பட்டிருந்தும் அந்த இலக்குகள் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குதல் மற்றும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) அமுல்படுத்தப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட | நிறைவேற்றப்பட்ட பணிகள் தொடர்பாக | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை வருடாந்த |

| | | |
|---|---|---|
| பணிகள் தொடர்பான செயல் முன்னேற்றம் சமர்ப்பிக்கப்படவில்லை. | செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஊழியர் வெற்றிடமும் மிகையும் | | |
| மீளாய்வாண்டின் இறுதி வரையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 46 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் சுகாதாரத் தொழிலாளர்களில் 30 பதவிகளில் மிகையும் காணப்பட்டன. | ஊழியர் வெற்றிடங்கள நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியில் 46 வெற்றிடங்கள் காணப்பட்டமையால் தொழிலாளர் பதவிகளில் மிகையாக இருந்ததை குறிப்பிட முடியுமாக இருந்த போதிலும் வீதி மற்றும் சுகாதார தொழிலாளர்களாக சேர்க்கப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் சேவையின் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிறுவனங்களை நிர்வகிக்கும் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டமையால் இவ்வாறு செயற்பட வேண்டி ஏற்பட்டிருந்தது |
| (ஆ) ஒழுக்காற்று நடவடிக்கை | | |
| வீதி தொழிலாளர்களுக்கு 2018 திசெம்பர் 06 ஆம் திகதி முதல் சேவையிலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன் VII ஆவது அத்தியாயத்தின் 8:6 உப பிரிவின் பிரகாம் ஊழியர் விடுமுறை சம்பளமற்ற விடுமுறையாக கவனத்தில் கொள்ளப்படாது | மேலதிகமாகச் செலுத்தப்பட்ட சம்பளம் அறவிடப்பட வேண்டும் | எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாமைக்கு உரிய பிரிவுகளுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| சம்பளத்திலிருந்து குறைக்கப்படாமல் 2018 ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை ரூபா 128,160 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) ஊழியர் கடன் | | |
| தம்புள்ள மாநகர சபையில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற மற்றும் இடமாற்றலாகிச் சென்ற 04 ஊழியர்களிடமிருந்து ரூபா 168,231 தொகையான கடன் பணம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | இது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) ஊழியர் பிணை | | |
| மத்திய மாகாண பிரதம செயலாளரின் 2003 ஏப்ரல் 11 ஆந் திகதிய சீபீசீ/சீஎஸ்/06/06/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நகர சபையில் சேவையாற்றுகின்ற 07 உத்தியோகத்தர்கள் பிணை வைப்புச் செய்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் பிணைப் பணத்தை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இது தொடர்பாக சுற்றறிக்கையின் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தித்தவெல்கொல்ல பிரதேசத்தில் ரூபா 1,000,000 பெறுமதியில் சிகிச்சை நிலையம் ஒன்றும், உடற்பயிற்சி நிலையமொன்றும் நிர்மாணிக்கப்பட்டு ரூபா 1,000,000 பெறுமதியான உடற்பயிற்சி உபகரணங்கள் பொருத்தப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டு முதல் பயன்பாடிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த சொத்துக்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இந்த நிலையத்தை பயன்படுத்துவதற்கு முடியுமான வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3.2 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபைக்குச் சொந்தமான 05 வாகனங்கள் மற்றும் 02 டெக்டர் டேலர்களுக்காக வருமான அனுமதிப் பத்திரம் பெறப்படவில்லை. | வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும் | வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நகர சபைக்குச் சொந்தமான 09 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளப் பட வேண்டும் | எதிர்காலத்தில் இந்த செயற்பாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான நகர சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 05 வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாகனங்கள் கையேற்கப்பட வேண்டும். | அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 02 கெப் வண்டிகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.<br><br>65-8999/301-9054 மற்றும் 301-5434 என்ற வாகனங்களுக்குரிய ஆவணங்கள் மற்றும் பதிவுப் புத்தகங்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான மீன் கடைகளை வாடகைக்கு வழங்கும் போது முதலாவது கேள்வி சமர்ப்பித்த பெறுமதியை விட குறைந்த பெறுமதியில் இரண்டாவது | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை | கேள்வி கோரும் போது காணப்பட்ட ஆரம்ப நிபந்தனைகளில் கடினமான நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டிருக்குமா |

| | | |
|---|---|---|
| கேள்வி சமர்ப்பிக்கப்பட்டதுடன் முதலாவது விண்ணப்பித்த கேள்விதாரருக்கு அறிவிக்கப்படாமல் இரண்டாவது கேள்விப் பெறுமதி ஏற்றுக்கொள்ளப்பட்டமையின் காரணமாக ரூபா 1,131,825 தொகையான கேள்வி தொகை இழக்கப்பட்டிருந்தது. | எடுத்து நட்டத்தைக் குறைக்க வேண்டும். | யின் இதனைத் தீர்க்க கூடியதாக இருக்கும். இதனை மீண்டும் கேள்வி கோருவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

## 3.5 பெறுகை

### 3.5.1 பெறுகை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் வருடாந்த பெறுகைத்திட்டம் தயாரிக்கப்படவில்லை. | வருடாந்த பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

### 3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தம்புள்ள நகரத்தில் உள்ள சுற்றுவட்டத்திற்கு அருகில் புத்தர் சிலையொன்றை நிர்மாணிப்பதற்கு உரிய சிறு கொங்கிரீட் கற்கள் 5000 இனை கொள்வனவு செய்வதற்காக ரூபா 170,000 செலுத்தப்பட்ட போதும் 3000 சிறு கொங்கிரீட் கற்கள் தேவைக்கு 5000 சிறு கொங்கிரீட் கற்கள் கொள்வனவு செய்யப்பட்டமையால் மேலதிகமாக பெறப்பட்ட 2000 கற்களுக்காக சபை ரூபா 102,000 செலவிட்டிருந்தது. | மேவுகை அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | இவ்வாறு மேலதிகமாக பெறப்பட்ட சிறு கொங்கிரீட் கற்கள் தம்புள்ள பொது வைத்தியசாலையின் நீதிமன்ற வைத்தியரின் கோரிக்கையின் படி வைத்தியசாலை வளவில் வீதியொன்றை அமைப்பதற்காக பயன்படுத்தப்பட்டது என்பதை அறியத்தருகின்றோம். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு பிரிவில் உத்தியோகத்தரின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டில் கணக்காள்வு ஐயவினா விநியோகிக்கப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு முறையாக நடாத்திச் செல்லப்பட வேண்டும். | தற்போது கணக்காய்வு ஐய வினாக்கள் மற்றும் அதற்குரிய கடமைகளுக்காக பயிளுனர் பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆண்டிற்கு 04 தடவைகள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 01 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நடாத்திச் செல்லப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒரு முறை மாத்திரமே நடாத்திச் செல்லப்பட்டது என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கலந்துரையாடல் திட்டம் பல்வேறு காரணங்கள் அடிப்படையில் அவை இரத்துச் செய்யப்பட்டமையால் அந்த திட்டங்கள் செயலிழந்து காணப்பட்டது. |